# முதலாம் பகுதி

## நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

### மாற்றற் காரணிகள்

**பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏக்கர் | = | 0.405 எக்டேயர்கள் (எ. டே.) |
| 1 | இருத்தல் (இரு) | = | 0.454 கிலோ கிறும்கள் (கி. கி.) |
| 1 | லோங் தொன் (2,240 இரு) | = | 1.016 மெற்றிக் தொன்கள் (மெ. தொ.) |
| 1 | அந்தர் (112 இரு) | = | 50.802 கி. கி. |
| 1 | மைல் | = | 1.609 கிலோ மீற்றர்கள் (கி. மீற்.) |
| 1 | லோங் தொன் மைல் | = | 1.635 மெ. தொன் கி. மீ. |
| 1 | இரு / ஏக்கரிற்கு | = | 1.121 கி. கி./எ. டே. |
| 1 | அந்தர் / ஏக்கரிற்கு | = | 125.536 கி. கி. / எ. டே. |
| 1 | பைந்து | = | 0.57 லிற்றர்கள் |
| 1 | இம்பீரியல் கலன் | = | 4.55 லிற்றர்கள் |

**மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 | எக்டேயர் | = | 2.471 ஏக்கர்கள் |
| 1 | கிலோகிறும் | = | 2.205 இருத்தல்கள் |
| 1 | மெற்றிக்தொன்(1,000கி.கி.) | = | 0.984 லோங் தொன் |
| 1 | மீற்றர் | = | 3.281 அடி |
| 1 | கிலோமீற்றர் | = | 0.621 மைல் |
| 1 | மெற்றிக் தொன் கிலோமீற்றர் | = | 0.612 லோங் தொன் மைல் |
| 1 | லிற்றர் | = | 1.76 பைந்துகள் |
| | | = | 0.219 இம்பீரியல் கலன்கள் |
| 1 | கி.கி. / எக்டேயரிற்கு | = | 0.892 இரு / ஏக்கரிற்கு |

**நெல் / அரிசி மாற்றி அமைத்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | புசல் (நெல்)(46 இரு) | = | 20.87 கி. கி. |
| 1 | மெற்றிக் தொன் நெல் | = | 47.92 புசல்கள் நெல் |
| | | = | 0.7 மெ. தொன் அரிசி |
| 1 | மெற்றிக் தொன் அரிசி | = | 68.46 புசல்கள் நெல் |
| | | = | 1.43 மெ. தொன் நெல் |
| 1 | புசல்நெல் / ஏக்கர் | = | 51.55 கி. கி. நெல் / எ. டே. |

# பொருளாதாரச் செயலாற்றமும் சிக்கல்களும் கொள்கைகளும் – 1980

## மொத்தத்தேசிய உற்பத்தியும் செலவும்

1980இல் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) நிலையான (1970) விலைகளில் 5.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சியின் வீதம் 1978 இல் காணப்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பான 8.2 சதவீதத்திலும், 1979இல் காணப்பட்ட 6.2 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க குறைவானதாகும். 1980இல் காணப்பட்ட வளர்ச்சி வீதம் பெரும்பாக பொருளாதாரத் திட்ட ஏற்பாட்டின் 6 சதவீதத்திலும் குறைவானதாகக் காணப்பட்டது. 1980 இல் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பெருந்தோட்ட வேளாண்மையின் மிகவும் பின் தங்கிய செயலாற்றமே காரணமாகும். தயாரிப்பு, கட்டிடவாக்கத் துறைகளில் குறைந்த வீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்ட அதே வேளையில் வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் ஆகியவை தொடர்ந்தும் கூடிய வளர்ச்சியைக் கொண்ட துறைகளாக விளங்கின.

மொத்தத் தேசிய உற்பத்தி நடைமுறைக்காரணிச் செலவு விலைகளில் ரூ. 618,070 இலட்சமாகவும், நிலையான (1970) விலைகளில் ரூ. 194,050 இலட்சமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டில் உள்ளடக்க விலைச்சுருக்கி 18 சதவீதமாக அமைந்தது. 1980ஆம் ஆண்டில் குடித்தொகை 1.8 சதவீதத்தால் கூடியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு இடமளித்து நோக்கின் தலைக்குரிய உண்மையான வருமானம் 3.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது, 1978 இலும் 1979இலும் ஏற்பட்ட முறையே 6.3 சதவீதம், 4.2 சதவீதம்கொண்ட தலைக்குரிய வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடத்தக்கது. 1980இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொதேஉ ரூ. 4,194 அல்லது 254 ஐ. அ. டொலர்கள் ஆகும்.

அட்டவணை 1.1

**தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் 1978—80**

| விடயம் | தொகை ப. இ. ரூபாய்களில் | | | வளர்ச்சி வீதம் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 (அ) | 1980 (அ) | 1978 | 1979 | 1980 |
| 1. நடைமுறைக்காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 40,479 | 49,782 | 62,246 | 16.7 | 23.0 | 25.0 |
| 2. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 17,401 | 18,501 | 19,575 | 8.2 | 6.3 | 5.8 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 40,242 | 49,542 | 61,807 | 16.9 | 23.1 | 24.8 |
| 4. நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 17,311 | 18,389 | 19,405 | 8.2 | 6.2 | 5.5 |
| 5. நடு ஆண்டுக் குடித்தொகை (ப. இ. ரூபாய்களில்) ... | 14.2 | 14.5 | 14.7 | 1.9 | 2.0 | 1.8 |
| 6 தலைக்குரிய மொ. தே. உ. (ரூ.) | | | | | | |
| (அ) நடைமுறை விலைகளில் ... | 2,836 | 3,424 | 4,194 | 14.8 | 20.7 | 22.5 |
| (ஆ) நிலையான விலைகளில் ... | 1,220 | 1,271 | 1,317 | 6.3 | 4.2 | 3.7 |

(அ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1980இல் மெதுவான வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை யில் சிறப்பிற்கு ஏதுவாக அமையக் கூடியவாறு பல உள்ளார்ந்த காரணிகளும் காணப்படுகின்றன. 1980இல் பொருளாதாரத்தில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு ஒவ்வாத காலநிலையினுல் மிகவும் பாதிக்கப்பட்ட பெருந்தோட்டத் துறையின் பின்தங்கிய செயலாற்றமே பெரிதும் காரணமாகும். இது தொடர்ந்து பெருந்தோட்ட உற்பத்தியில் செயல்முறைத் தயாரிப்புத்துறையில் ஒரு முதன் மைப் பிரிவான தயாரிப்புத் துறையைப் பாதித்தது. இதனைத் தவிர்த்து நோக் கின் ஏனைய எல்லாத் துறைகளிலும் நிறைவிற்குரிய வளர்ச்சி வீதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் முதலீடுகளில் மிகப்பெரும் அதிகரிப்பு காணப்பட்டதுடன் இது, ரூ. 24,000 இலட்சத்திற்குக் கூடுதலாகவும் முன்னைய ஆண்டிலும் பார்க்க 81 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. மூலதனப் பொருட்களில் பெரிதும் பொறிகள், போக்குவரத்துக் கருவிகள் என்பவற்றின் இறக்குமதியில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. 1980இல் மூலதனச் செலவில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு பொருளாதாரத்தில் உற்பத்தி இயலளவு விரிவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. மூலதன இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு தயாரிப்பு, கட்டிட வாக்கம், போக்குவரத்துபோன்ற முதன்மைத் துறைகளில் ஏற்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பழமையடைந்த மூதலனக் கருவிகள் பதிலீடு செய்யப்பட்டமை முதலீட்டில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படக் காரணமெனக் கருதப்பட்டது. எனவே பொருளாதாரத்தில் முதன்மைத் துறைகளின் இயலளவும் உற்பத்தி ஆற் றலும் எதிர்காலத்திற்காக அதிகரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

1980இல் வேளாண்மைத்துறையின் வெளியீடு 3.1 சதவீதத்தால் அதிகரித் தது. இது தனியே உள்நாட்டு வேளாண்மையின் 7.5 சதவீத அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும். பெருந்தோட்ட வேளாண்மையின் வளர்ச்சி 10.1 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமைக்கு மூன்று முதன்மையான பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தி குறைவடைந்தமையே காரணமாகும். இதில் தேயிலை 7.3 சதவீதத் தால் 1,910 இலட்சம் கிலோக்கிறும்களுக்கும், இறப்பர் 13 சதவீதத்தால் 1,330 இலட்சம் கிலோகிறும்களுக்கும், தெங்குப் பொருட்கள் 15 சதவீதத்தினுல் 20,260 இலட்சம் தேங்காய்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. பெருந்தோட்டப் பயிர்கள் ஒவ் வாத காலநிலையினுல் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாயினும் இதுவே இதன் குறைந்த செயற்றிறனுக்குக் காரணமன்று. மாருக உள்நாட்டு வேளாண்மை குறிப்பாக நெல் உற்பத்தி சென்ற ஆண்டைவிடக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. பெரும் போகத்திலும் சிறுபோகத்திலும் உற்பத்தி 21.3 இலட்சம் மெற்றிக் தொன்னுக மதிப் பிடப்பட்டுள்ளது. இது 1979ஆம் ஆண்டைவிட 11 சதவீதம் அதிகமானதாகும். துணை உணவுப் பயிர்கள், பழங்கள், காய்கறிகள் என்பனவற்றின் உற்பத்தி 1980இல் 5 சதவீதத்தினுல் அதிகரித்தது. காட்டுத் தொழிலிலும், கடற்றொழிலிலும் கணிச மான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மொத்தத் தேசிய உற்பத்தி

## காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி.

# கைத்தொழில் மூலத்தின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

*நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில்*




இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 1.2

### காரணிச் செலவு (1970) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | | | சென்ற ஆண்டிலும் பார்க்க சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1977 | 1978 | 1979 (அ) | 1980 (அ) | 1978 | 1979 | 1980 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 3,732 | 4,299 | 4,532 | 4,622 | 4,766 | 5.4 | 2.0 | 3.1 |
| 2. தயாரிப்பு, சுரங்கத்தொழில், பயன்படுபணிகள் .. | 2,393 | 3,003 | 3,318 | 3,501 | 3,574 | 10.5 | 5.5 | 2.1 |
| 3. கட்டிட வாக்கம் ... | 744 | 619 | 794 | 960 | 1,066 | 28.3 | 20.9 | 11.0 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து ஏனைய பணிகள் ... | 6,318 | 8,157 | 8,757 | 9,418 | 10,169 | 7.4 | 7.5 | 8.0 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 13,187 | 16,078 | 17,401 | 18,501 | 19,575 | 8.2 | 6.3 | 5.8 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் .. | —220 | — 79 | — 90 | —112 | —170 | — | — | — |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி .. | 12,967 | 15,999 | 17,311 | 18,389 | 19,405 | 8.2 | 6.2 | 5.5 |

(அ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1979இல் ஏற்பட்ட 5.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1980இல் தயாரிப்பு, சுரங்கத்தொழில், கல்அகழ்வுத் தொழில் பயன்பாட்டுப்பணிகள்துறை 2.1 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

இது முக்கியமாக பெருந்தோட்டப்பயிர்களின் உற்பத்திச் செய்முறையில் உண்மையான கூட்டப்பட்ட பெறுமதி 10 சதவீதத்தால் குறைவடைந்தமையால் தயாரிப்புத் துறையின் அதிகரிப்பு 0.8 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தமையின் விளைவாகும். தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீடு முன்னைய ஆண்டின் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980 இல் 5 சதவீதத்தால் அதிகரித்தது. ஏப்பிறல் தொடக்கம் யூன் மாதம் வரை நிலவிய மின்வெட்டுக் காரணமாக தொழிற்சாலைக் கைத்தொழிலின் செயலாற்றம் பாதகமான முறையில் பாதிக்கப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட இப்பாதிப்பு உற்பத்தி நேரங்களை மாற்றியமைத்தும் பதிலீட்டு மின்வலுவை வழங்குவதற்கு மின் உருவாக்கிகளை நிறுவியதன் மூலமும் ஓரளவிற்கு மிதப்படுத்தப்பட்டது. உண்மையில் 1980இல் கைத்தொழிலுக்கான மின் விற்பனை 2 சதவீதத்தால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. தொழில் நுட்பச் சிக்கல்களின் காரணமாக சீமெந்துக் கூட்டுத்தாபனம் இரண்டு மாதங்கள் தொழிற்படாதிருந்தமையால் அரசதுறைசார்ந்த கைத்தொழில்களின் வெளியீடும் பாதிக்கப்பட்டது. அரசதுறைக்கைத்தொழில் 1979இன் 3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1980இல் 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது பெரிதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெருமளவு அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். ஆனால் சீமெந்து, தாளும் தாள் பொருட்களும், தயாரிக்கப்பட்ட உலோக பொருட்கள் என்பவற்றின் வெளியீடுகள் வீழ்ச்சியடைந்தன. தனியார்துறைக் கைத்தொழில் 1980இல் 4.5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

சுரங்க, கல்அகழ்வுத் தொழிலின் வெளியீடு 5 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையில் ஏற்பட்ட அதிகரிப்பை நிர்ணயித்த முதன்மை விடயமாக இரத்தினக் கல் அகழ்தல் விளங்குகிறது. 1980இல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்களின்

க. ஏ. பெ. ரூ. 4,581 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டின் ரூ. 4,901 இலட்சத்தினைவிடக் குறைவாக விளங்கியது. அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் இரத்தினக் கற்களின் பெறுமதி 1980இல் ரூ. 6,638 இலட்சமாக அமைந்தது. கட்டிடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி காரணமாகச் செங்கற்கள், மணல், ஓடுகள் போன்றவற்றுக்கான கேள்வி குறைவடைந்தது, எனவே 1979ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இத்துறையின் நடவடிக்கைகள் குறைவடைந்து கொண்டு சென்றன.

1980இல் கட்டிடவாக்கத்துறையின் வெளியீடு 11 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு முன் இரண்டு ஆண்டுகளில் இத்துறையில் ஏற்பட்ட மிக விரைவான வளர்ச்சியைத் தொடர்ந்து இது ஏற்பட்டது. 1978, 1979 உடன் ஒப்பிடுகையில் 1980ஆம் ஆண்டில் கட்டிடவாக்க நடவடிக்கையில் ஒருவகையான சமன்பாடு காணப்படுகிறது. இவ் ஆண்டுகளில் கட்டிட ஆக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இதுவரையில் ஈடு செய்யப்படாதிருந்த வதிவிட, வதிவிடமில்லாத கட்டிடங்களுக்கான கேள்வியில் சில பகுதியை ஈடுசெய்திருக்கும். கட்டிடவாக்கச் செலவுகளின் ஏற்றத்தினாலும் தற்காலிகமாகச் சீமெந்தில் ஏற்பட்ட தட்டுப்பாட்டினாலும் கட்டிடவாக்கத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம். சீமெந்தின் சராசரி விலை 1979 ஆம் ஆண்டின் (50 கிலோ) சரைக்கு ரூ. 45 இலிருந்து 1980 இல் சரைக்கு ரூ. 70 இற்கு உயர்த்தப்பட்டது. ஏனைய கட்டிடப் பொருட்களின் விலைகளும் இவ்வாண்டில் கணிசமாக அதிகரித்தன. கட்டிட ஆக்கத்தில் நடுத்தர அளவுடைய வீடு ஒன்றைக் கட்டுவதற்கான செலவு 24 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட தடை காரணமாக 1980ஆம் ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் சீமெந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. கூட்டுத்தாபனத்தின் சீமெந்து விற்பனை 1979இன் 608 ஆயிரம் தொன்களுடன் ஒப்பிடுகையில் 1980இல் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 559 ஆயிரம் தொன்களாக விளங்கியது. எனினும் இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தையும் கணக்கில் எடுக்கும்போது, சீமெந்தின் கிடைக்கக்கூடிய தன்மை 1979 ஆண்டைவிட 10 சதவீதம் கூடுதலாக விளங்கியது. இவ்வகையான முன்னேற்றங்கள் காணப்பட்டபோதும் கட்டிட ஆக்க நடவடிக்கை பண அடிப்படையில் பெருமளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. கட்டிட ஆக்கத்தில் ஏற்பட்ட முதன்மையான அதிகரிப்பு பொதுத்துறைப் பொறியியல் வேலைகள் குறிப்பாக விரைவுபடுத்தப்பட்ட மகாவலித்திட்டம், வதிவிடமற்ற கட்டிடங்கள் என்பனவற்றில் ஏற்பட்டன. தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமும் 1980 இன் கட்டிட ஆக்க நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

பணிகள்துறையில் நிலவிய உயர்ந்த மட்டத்திலான தொழிற்பாடுகள் 1980இலும் தொடர்ந்து ஏற்பட்டன. மொத்த சில்லறை வர்த்தகத்துறை 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. முன்னைய இரு ஆண்டுகளைப்போல இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பெருமளவிற்கு இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே அடிப்படையாக இருந்தது. உண்மையில் கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பண்பான வளர்ச்சி அதன் செயற்பாட்டு மட்டத்தில் இறக்குமதிக் கேள்விக்கு ஊக்கமளிக்கும் ஒரு உந்துவிசையாக இருந்தது. போக்குவரத்துத்துறையின் வெளியீடு 1980ஆம் ஆண்டில் 7.1 சதவீதத்தால் அதிகரித்தது. கடந்த சில ஆண்டுகளில் குறிப்பாக 1980இல் போக்குவரத்துக் கருவிகளில் உயர்ந்த மட்டத்திலான முதலீடு காணப்பட்டது. உந்து ஊர்திகள் பதிவாளர் அறிக்கையின்படி 1980ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சரக்கு வண்டிகளின் எண்ணிக்கை 9,323ஆல் அதிகரித்துள்ளது. பயணிகளுக்கான ஊர்திகளும், சுற்றுலாக்களுக்கும் பயணிகளின் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பட்ட வண்டிகளும் 1980ஆம் ஆண்டில் 2,702ஆல் அதிகரித்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக ஊர்திகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பானது போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட அதிகரித்த போட்டித்தன்மையைக் காட்டுகின்றது.

வங்கித்தொழிலும் ஏனைய நிதிப்பணிகளும் 1980 இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. இப்பணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1979இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980இல் 15 சதவீதத்தால் மிக விரைவாக அதிகரித்தது.

ஏனைய பணிகளின் வெளியீடு 1980இல் 8 சதவீதத்தால் அதிகரித்தது. சுற்றுலாவின் முதன்மைத்தன்மை அதிகரித்தமையால் உணவகங்களினதும், சுற்றுலா விடுதிகளினதும் பணிகளும், ஆட்களுக்கான பணிகளும் கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தன. தாராள இறக்குமதிக் கொள்கை, தயாரிப்பிலும், கட்டிட ஆக்கத்திலும் நிலவிய உயர்ந்த மட்ட முதலீடு துறையிலான அதிகரித்த நடவடிக்கையில் முதன்மையான செல்வாக்கைக் கொண்டிருந்ததுடன் இவற்றின் வெளியீடு கடந்த மூன்று ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் உயர்ந்த வீத வளர்ச்சி வெளியீட்டைக் கொண்டிருந்தன. எனவே இத்துறைகளில் வேலைவாய்ப்புக்களும் அதிகரித்திருக்க வாய்ப்பு ஏற்பட்டது.

1980ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் துறைவகைப்படியான செயலாற்றம் 1978, 1979ஆம் ஆண்டுகளைவிட வேறுபட்டதாக அமைந்திருந்தது. 1980ஆம் ஆண்டில் மொ. தே. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பில் 14 சதவீதம் வேளாண்மைத் துறையில் இருந்து ஏற்பட்டது. இது, 1979ஆம் ஆண்டின் 8 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. உள்நாட்டு வேளாண்மைத்துறையில் குறிப்பாக நெல்லில் தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றகரமான செயலாற்றம் இதற்குக் காரணமாகும். கட்டிடவாக்கம், தயாரிப்புத்துறை இரண்டினதும் பங்கு வீழ்ச்சியடைந்திருந்தது. பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திச் செய்முறையில் கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை தயாரிப்புத்துறையின் பங்கு வீழ்ச்சியடைந்தமைக்குப் பொறுப்பான முதன்மைக் காரணியாகும். வர்த்தகம், போக்குவரத்து ஏனைய பணிகள் என்பவை 1980ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மை மூலமாக அமைந்தன. மொ. தே. உ. யில் ஏற்பட்ட அதிகரிப்பில் வர்த்தகம், போக்குவரத்து என்பவை 1978இன் 29 சதவீதத்துடனும் 1979இன் 36 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 1980இல் இவை 41 சதவீதத்திற்குப் பொறுப்பாயமைந்தன.

தயாரிக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளமையை நோக்கும்போது அல்லது பொதுவாக தயாரிப்பு, கட்டிட ஆக்கம் என்பவற்றின் துறைவகையான முதன்மைத்தன்மையில் ஏற்பட்ட நீண்டகால மாற்றத்தை நோக்கும்போது கடந்த மூன்று ஆண்டுகளில் குறிப்பாகத் தயாரிப்பு, கட்டிட ஆக்கம் என்பவற்றின் முதலீட்டில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் முதன்மையான அமைப்பு மாற்றம் எதனையும் இதுவரையில் ஏற்படுத்தவில்லை. பணிகள்துறைகளின் துறைவகையான முதன்மைத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பினால் மேலும் வலுப்பெற்றதுடன் தொடர்ந்து ஏற்பட்ட அதிகரித்த வளர்ச்சி இறக்குமதித்திறனை பேணுவதில் அல்லது அதிகரிப்பதிலேயே தங்கியுள்ளது. இது, மறுபுறம் இறக்குமதி ஆற்றலில் தங்கியிருப்பினும் உண்மையில் இவ்வாற்றல் பெரிதும் ஏற்றுமதி வருவாய்களிலேயே தங்கியுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் முதன்மைத்தன்மை காரணமாகப் பொருளாதார செயலாற்றத்தில் வர்த்தகமாற்று விகிதம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் 1980ஆம் ஆண்டில் இலங்கையில் பொருளாதாரத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் இது வர்த்தகமாற்று விகிதத்தை 19 சதவீதத்தால் மேலும் மோசமடையச் செய்தது.

## நிலையான (1970) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின்

| துறைகள் | கூட்டப்பட்ட பெறுமதி (ரூபா பத்து இலட்சங்களில்) 1978 | 1979 (அ) | 1980 (ஆ) |
|---|---|---|---|
| 1. வேளாண்மை காட்டுத்தொழில் வேட்டையாடல், கடற்றொழில் ... | 4,532 | 4,622 | 4,766 |
| 1.1. வேளாண்மை ... | 4,176 | 4,239 | 4,348 |
| 1.1.1. தேயிலை ... | 398) | (412) | (381) |
| 1.1.2. இறப்பர் ... | (225) | (223) | (194) |
| 1.1.3. தெங்கு .. | (488) | (519) | (462) |
| 1.1.4. நெல் ... | (1,116) | (1,132) | (1,267) |
| 1.1.5. ஏனையவை .. | (1,949) | (1,953) | (2,044) |
| 1.2. காட்டுத் தொழில் ... | 155 | 166 | 181 |
| 1.3. கடற்றொழில் ... | 201 | 217 | 237 |
| 2. சுரங்கத் தொழிலும் அகழ்வுத் தொழிலும் ... | 619 | 652 | 684 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 2,541 | 2,659 | 2,681 |
| 3.1. ஏற்றுமதி பதனிடல் ... | 840 | 877 | 791 |
| 3.2. தொழிற்சாலை கைத்தொழில் ... | 1,362 | 1,417 | 1,498 |
| 3.3. சிறுகைத்தொழிலும், ஏனையவையும் ... | 339 | 365 | 402 |
| 4. கட்டடவாக்கம் ... | 794 | 960 | 1,066 |
| 5. மின்வலு, வளி, நீர், இன்னோரன்ன ... | 158 | 190 | 209 |
| 6. போக்குவரத்து, தொடர்பூட்டல், இன்னோரன்ன... | 1,607 | 1,716 | 1,838 |
| 7. வர்த்தகம் ... | 3,267 | 3,551 | 3,849 |
| 7.1. இறக்குமதிகள் ... | 702 | 864 | 985 |
| 7.2. ஏற்றுமதிகள் ... | 701 | 709 | 709 |
| 7.3. உள்நாட்டு .. | 1,864 | 1,978 | 2,155 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி உண்மைச்சொத்து .. | 318 | 350 | 402 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை .. | 499 | 518 | 549 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 854 | 905 | 959 |
| 11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் ... (வே.எ.கு.) | 2,212 | 2,378 | 2,572 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 17,401 | 18,501 | 19,575 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருவாய் .. | — 90 | — 112 | — 170 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி .. | 17,211 | 18,389 | 19,405 |

(அ) தற்காலிகம்

அட்டவணை 1.3

## அதிகரிப்பும் துறைவகைப்படியான உள்ளடக்கமும்

| மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீத பங்கு (ரூபா பத்து இலட்சங்களில்) | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ரூபா பத்து இலட்சங்களில்) | | | மொ. தே. உ. அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1978 | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 |
| 26.2 | 25.1 | 24.6 | 233 | 90 | 144 | 17.8 | 8.4 | 14.2 |
| 24.1 | 23.1 | 22.4 | 199 | 63 | 109 | 15.2 | 5.9 | 10.7 |
| (2.3) | (2.2) | (2.0) | (—18) | (14) | (—31) | (—1.4) | (1.3) | (—3.1) |
| (1.3) | (1.2) | (1.0) | (12) | (—2) | (—29) | (—0.9) | (—0.2) | (2.9) |
| (2.8) | (2.8) | (2.4) | (65) | (31) | (—57) | (5.0) | (2.9) | (—5.6) |
| (6.4 | (6.2) | (6.5) | (126) | (16) | (135) | (9.6) | (1.5) | (13.3) |
| (11.3) | (10.6) | (10.5) | (14) | (4) | (91) | (1.1) | (0.5) | (9.0) |
| 0.9 | 0.9 | 0.9 | 12 | 11 | 15 | 0.9 | 1.0 | 1.5 |
| 1.2 | 1.1 | 1.2 | 22 | 16 | 20 | 1.7 | 1.5 | 2.0 |
| 3.6 | 3.5 | 3.5 | 100 | 33 | 32 | 7.6 | 3.4 | 3.1 |
| 14.7 | 14.5 | 13.8 | 184 | 118 | 22 | 14.0 | 10.9 | 2.2 |
| 4.9 | 4.8 | 4.1 | 17 | 37 | — 86 | 1.3 | 3.4 | — 8.5 |
| 7.9 | 7.7 | 7.7 | 135 | 55 | 71 | 10.3 | 5.1 | 7.0 |
| 2.0 | 2.0 | 2.0 | 32 | 26 | 37 | 2.4 | 2 4 | 3.6 |
| 4.6 | 5.2 | 5.5 | 175 | 166 | 106 | 13.3 | 15.4 | 10.4 |
| 0.9 | 1.0 | 1.1 | 27 | 32 | 19 | 2.1 | 3.0 | 1.9 |
| 9.3 | 9.3 | 9.5 | 109 | 109 | 122 | 8.3 | 10.1 | 12.0 |
| 18.9 | 19.3 | 19.8 | 268 | 284 | 298 | 20.4 | 26.3 | 29.3 |
| 4.1 | 4.7 | 5.2 | 189 | 162 | 121 | 14.4 | 15.0 | 11.9 |
| 4.1 | 3.9 | 3.7 | 38 | 8 | — | 2.9 | 0.7 | — |
| 10.8 | 10.8 | 11.1 | 41 | 114 | 177 | 3.1 | 10.6 | 17.4 |
| 1.8 | 1.9 | 2.1 | 23 | 32 | 52 | 8.8 | 3.0 | 5.1 |
| 2.9 | 2.8 | 2.8 | 24 | 19 | 31 | 1.8 | 1.8 | 3.1 |
| 4.9 | 4.9 | 4.9 | 63 | 51 | 54 | 4.8 | 4.7 | 5.3 |
| 12.8 | 12.9 | 13.3 | 113 | 116 | 194 | 8.6 | 10.8 | 19.1 |
| 100.5 | 100.6 | 100.9 | 1,323 | 1,100 | 1,074 | 100.8 | 102.0 | 105.7 |
| — 0.5 | — 0.6 | — 0.9 | — 11 | — 22 | — 58 | — 0.8 | — 2.0 | — 5.7 |
| 100.0 | 100.0 | 100.0 | 1,312 | 1,078 | 1,016 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வர்த்தக மாற்று விகிதம் 1979ஆம் ஆண்டின் 68 உடன் ஒப்பிடுகையில் 1980ஆம் ஆண்டில் (1970 = 100) 55இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக வர்த்தக மாற்று விகித மாற்றங்களுக்கேற்ப சீராக்கஞ் செய்யப்பட்ட மொ.தே. உற்பத்தியில் மதிப்பிடப்படும் உண்மைத்தேசிய வருமானம் 1979ஆம் ஆண்டின் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 1980ஆம் ஆண்டில் 3.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உண்மைத் தேசிய வருமானத்தின் மதிப்பீடு புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மொத்தத் தேசியச் செலவு, மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் என்பவற்றின் மதிப்பீடுகள் புள்ளிவிபரப்பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளன.

1980இல் மொத்த உள்நாட்டுச்செலவு ரூ. 835,500 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1979ஆம் ஆண்டைவிட 42 சதவீதம் கூடுதலானதாகும். இது நுகர்வுச்செலவாகிய ரூ. 590,840 இலட்சத்தையும், மூலதன ஆக்கமான ரூ. 244,660 இலட்சத்தையும் கொண்டிருந்தது. நுகர்வுச்செலவில் இறக்குமதிமீதான செலவுகள் ரூ. 136,020 இலட்சம், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்மீதான செலவு ரூ. 397,970 இலட்சம், அரசின் நுகர்வுச்செலவு ரூ. 56,850 இலட்சம் என்பன அடங்கியிருந்தன. இவ்வாறாக இறக்குமதிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவு 38 சதவீதத்தாலும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களின் நுகர்வுச்செலவு 30 சதவீதத்தாலும் அதிகரித்தது. இது 1979இல் ஏற்பட்ட முறையே 29 சதவீத 25 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடத்தக்கது.

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1980ஆம் ஆண்டில் ரூ. 244,660 இலட்சமாக அமைந்து 1979ஆம் ஆண்டைவிட 81 சதவீதம் அதிகமாக விளங்கியது. மத்திய அரசின் மூலதன ஆக்கம் ரூ. 76,900 இலட்சமாகவும் தனியார்துறை, அரச கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் ரூ. 167,760 இலட்சமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன.

1980இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் பெருமளவு அதிகரிப்பு காணப்பட்டது. மத்தியவங்கியின் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணின்படி இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப்பொருட்களின் அளவு 19 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெறுமதி அடிப்படையில் அளவிடுகையில் பொறிகள், கருவிகளின் இறக்குமதி 68 சதவீதத்தினாலும், போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி 131 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகுப்புக்கள் ஒவ்வொன்றின் கீழுமான முதலீட்டின் பகுப்பு புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணையில் தரப்பட்டுள்ளது. கடந்த மூன்றுஆண்டுகளில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளை அட்டவணை 1.4 காட்டுகின்றது. முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பில் மொத்தத்தொகை தேய்மான வசதி கிடைக்கத்தக்கதாயிருந்தமை பெரும் செல்வாக்கை கொண்டிருந்தது. முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான தரவுகள் தயாரிப்பு, போக்குவரத்து, கட்டிட ஆக்கத்துறைகளின் மூலதன இருப்பில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையைக் காட்டுகின்றது.

## அட்டவணை 1.4

### இறக்குமதியான முதலீட்டுப் பொருட்களில் தெரிவு செய்யப்பட்ட சில விடயங்கள்

கொ. கா. பெ. பெறுமதி 000' ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. பேருந்துகளும் பயணத்தர் வண்டிகளும் ... | 29,231 | 412,054 | 421,207 |
| 2. சரக்கு வண்டிகள் ... | 237,068 | 317,824 | 765,460 |
| 3. பொறிகள் பொருத்தப்பட்ட அடிச்சட்டம் ... | 407,482 | 282,538 | 235,296 |
| 4. இழு பொறிகள் ... | 350,992 | 366,214 | 370,246 |
| 5. பாரம் இழு வண்டிகள் ... | 37,772 | 196.168 | 512,351 |
| 6. புகைவண்டித் தொடர்களும் பாகங்களும் ... | 100,343 | 471,686 | 300,043 |
| 7. வானூர்திகளும் வான்கலங்களும் ... | 47,721 | 33,221 | 3,725 |
| 8. கடற்கலப்பொறிகள், படகின் வெளிப்புறப்பொறிகள் ... | 63,486 | 78,208 | 107,334 |
| 9. கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், இழுவைக்கப்பல்கள் ... | 8,094 | 5,218 | 6,721 |
| 10. மின் உற்பத்தியாக்கிகள் ... | 45,979 | 15,030 | 117,457 |
| 11. கடைசல், துளையிடற் பொறிகள். ... | 20,949 | 39,079 | 91,659 |

மூலம்: இலங்கைச் சுங்கம்

*1980*இல் கட்டிட ஆக்கத்துறையின் முதலீட்டில் அதிகரிப்பு காணப்பட்டது. பெரும்பாலும் இம்முதலீட்டில் பெரும்பங்கு அரசதுறையில் ஏற்பட்டது. விரைவு படுத்தப்பட்ட மகாவலித் திட்டத்தின் மீதான செலவு ரூ. *30,000* இலட்சத்திற்கு மேலாக அதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மை சபை ரூ.*10,000* இலட்சத்திற்கு மேல் செலவிட்டது. கடந்த இரு ஆண்டுகளைப் போன்று பொறியியல் கட்டிட ஆக்க முதலீட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

*1978* தொடக்கம் *1980* வரையுள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மூலதனச் செலவில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக அமைந்தது. முதலீட்டிற்கும் இறக்குமதிகளுக்கும் இடையிலான விகிதம் *1980*இல் மூன்றில் ஒன்றிற்கு வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை 1.5

### மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 13,246 | 22,846 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதி) ... | 3,217 | 5,091 | 7,531 |
| 3. இறக்குமதி உள்ளடக்கம் . | 37.8 | 38.4 | 33.0 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம்.

### மூலவளங்களும் பயன்பாடுகளும்

இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த உள் நாட்டு உற்பத்தியையும், இறக்குமதிகளையும் உள்ளடக்கும் மொத்த மூல வளங்கள் ரூ. *1,058,660* இலட்சமாக அமைந்து *1979*ஆம் ஆண்டைவிட *38* சதவீதம் கூடுதலாக விளங்கியது. உண்மை நியதிகளின் அளவீடுகளில் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த மூலவளங்கள் *1979*இல் *10.7* சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் *8.3* சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மூலவளங்களில் ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்பு *1980*ஆம் ஆண்டில் வளர்ச்சி வீதம் குறைவாக இருந்தமையையும், இறக்குமதிகளின் அளவு குறைவாக இருந்தமையும் எடுத்துக்காட்டியது உண்மைநியதிகளில் மூலவளங்களின் பங்கீட்டை ஆராயுமிடத்து *59* சதவீதமான மூலவளங்கள் நுகர்விலும் *19* சதவீதமானவை மூலதன ஆக்கத்திலும் செலவிடப்பட்டுள்ளன. அதேவேளையில் ஏற்றுமதிகள் *21* சதவீதமான மூலவளங்களைப் பெற்றன. *1979*ஆம் ஆண்டில் *61* சதவீதமான மூலவளங்கள் நுகர்விலும் *16*சதவீதமானவை மூலதனஆக்கத்திலும் செலவிடப்பட்டுள்ளமையுடன் ஒப்பிடுகையில் மூலவளங்கள் நுகர்விலிருந்து மூலதன ஆக்கத்திற்கு மாறியுள்ளது.

## அட்டவணை 1.6

### மூலவளங்களின் உள்ளடக்கமும் பயன்பாடும் 1978—1980

| வகுப்பு | நடைமுறை சந்தை விலைகளில் (ப. இ. ரூபாய்களில்) | | | 1978 விலைகளில் | | | | | | சதவீத அதிகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1980 | 1978 | | 1979 | | 1980 | | 1978 மேலாக 1979 | 1979 மேலாக 1980 |
| | | | | தொகை ரூ. ப. இ. | % | தொகை ரூ.ப.இ. | % | தொகை ரூ.ப.இ. | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 58,285 | 76,970 | 105,866 | 58,285 | 100 | 64,546 | 100 | 69,887 | 100 | 10.7 | 8.3 |
| 1.1 மொ.உ.உ. சந்தை விலைகளில் .. | 42,428 | 52,147 | 68,271 | 42,428 | 73 | 45,058 | 70 | 47,671 | 67 | 6.2 | 5.8 |
| 1.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள்... | 15,857 | 24,823 | 37,595 | 15,857 | 27 | 19,488 | 30 | 22,216 | 33 | 23.0 | 14.0 |
| 2. பயன்பாடு ... | 58,285 | 76.970 | 105,866 | 59,285 | 100 | 64,546 | 100 | 69,887 | 100 | 8.9 | 8.3 |
| 2.1 நுகர்வு .. | 36,148 | 45,169 | 59,084 | 36,148 | 62 | 39,410 | 61 | 42,070 | 59 | 9.0 | 6.7 |
| 2.2 மொத்த நிலையான மூலதன ஆக்கம் ... | 8,521 | 13,246 | 22,846 | 8,521 | 15 | 10,153 | 16 | | 19 | 19.2 | 20.8 |
| 2.2.1 அரசு .. | (3,077) | (3,809) | (6,710) | (3,077) | (5) | (3,569) | (6) | (4,104) | (6) | (16) | (15.0) |
| 2.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | (2,056) | | | (2,056) | (4) | | | | | | |
| 2.2.3 தனியார் துறை ... | (3,388) | (9,437) | (16,136) | (3,388) | (6) | (6,584) | (10) | (8,164) | (13) | (20.9) | (24.0) |
| 2.3 இருப்புக்கள் ... | + 33 | + 281 | +1,620 | + 33 | — | 124 | | 566 | 1 | — | — |
| 2.4 பொருட்கள், பணிகளின் ஏற்றுமதிகள் .. | 13,583 | 18,274 | 22,316 | 13,583 | 23 | 14,983 | 23 | 14,983 | 21 | 10.3 | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உண்மைநியதிகளில் நுகர்வு 6.7 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 25 சத வீதத்தாலும் அதிகரித்தன. இது 1979இல் முறையே 9 சதவீத, 20 சதவீத அதி கரிப்புகளுடன் ஒப்பிடத்தக்கது. 1980இல் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவானது 1979இல் அதே அளவாகவே காணப்பட்டது. உண்மையான ஏற்றுமதிகள் சிறி தளவான அதிகரிப்பையே காட்டிநின்றன.

தற்போதைய மதிப்பீடுகளின்படி சேமிப்புக்கள் 1979இன் ரூ. 69,780 இலட் சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 91,870 இலட்சமாக அமைந்து 32 சதவீத அதிகரிப் பைக் கொண்டிருந்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேமிப்பின் விகிதம் ஏறக்குறைய 13.5 சதவீதமாக அமைந்து 1979ஆம் ஆண்டினையே ஒத் திருந்தது. பணவீக்கத்தாக்கங்கள் நிலவியபோதும் சேமிப்புக்களின் பங்கு வீழ்ச்சி யடையவில்லை என்பதற்கு இது மேலும் சான்ருக உள்ளது.

அட்டவணை 1.7

**சேமிப்புகள்**

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 42,428 | 52,147 | 68,271 |
| 2. வெளிநாட்டு மூலவளங்கள் (பொருட்கள் பணிகள் ஆகியவற்றின் இறக்குமதி நீங்கலாக) ... | 2,274 | 6,549 | 15,279 |
| 3. முதலீடு ... ... ... | 8,554 | 13,527 | 24,466 |
| 4. சேமிப்பு (3-2) ... ... | 6,280 | 6,978 | 9,187 |
| 5. சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 4) ... | 14.8 | 13.4 | 13.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வேளாண்மை

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நெற்றுணைத்துறை தவிர்ந்த வேளாண் மைத்துறையின் செயலாற்றம் மீண்டும் எதிர்பார்ப்புக்களுக்குக் குறைவாகவே இருந்தது. 1980ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி 1979ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.0 சதவீதத்திற்கெதிராக 2.9 சதவீதம் கொண்ட ஓரளவு திருந்திய வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. 1978, 1977 ஆம் ஆண்டுகளுக்கு இது தொடர் பான வீதங்கள் முறையே 4 சதவீதமாகவும், 7 சதவீதமாகவும் இருந்தன. 1979, 1980 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதங்கள் குடித்தொகை அதிகரிப்புக்காகச் சீராக்கம் செய்யப்படின் அதனுல் பெறப்படும் தலைக்குரிய வளர்ச்சி வீதங்கள் மனநிறைவுக்குரியனவாக அமையவில்லை. மரப்பயிர்த்துணைத்துறையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிக்கான மிகைக்கிடைப்பனவைக் குறைத்தது. 1980இல் தேயிலை உற்பத்தி 7.3 சதவீதத்தால்[1] வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பர் உற்

1. 1980 ஆம் ஆண்டில் முதலீடுகளின் ஏற்றுமதிகள் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அண்மைக் காலத்தில் சுங்கத்தால் தேயிலை ஏற்றுமதிகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட அளவுகள் பெறப் பட்ட உற்பத்தி, மதிப்பிடப்பட்ட உற்பத்தி, இருப்புக்களின் மாற்றங்கள் இவற்றுடன் நோக்கின் ஏற்று மதி செய்யப்படக்கூடியதிலும் பார்க்க கூடுதலாக உள்ளது.